கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2014/2015 (யூன் 2017)

# HC/S 3113 Hindu Arihitecture

நேரம் : 03 மணித்தியாலங்கள்

EASTERN UNIVERSITY, SRI LANKA 02 MAY

**முதலாம் பகுதியில் இருந்து மூன்று வினாக்களையும் இரண்டாம் பகுதியில் இருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

---

## பகுதி – I

01. இந்துக் கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியில் பல்லவர்காலம் வியத்தகு மாற்றங்களுடன் விருத்தியைக் கண்ட காலமாகும். இக்கூற்றினை ஆதாரமாகக் கொண்டு மேல்வரும் தலைப்புக்களை ஆராய்க.

    (i) பல்லவ மன்னர்கள்
    (ii) கோயிற் கட்டடக்கலைப் பாணி

02. திராவிடக் கட்டடக் கலை மரபில் சோழர்காலம் பொற்காலமாகும் என்பதனை கருத்திற்கொண்டு விளக்கம் தருக

    (i) மன்னர்களின் பங்கும் பணியும்
    (ii) கலையும் தொழில்நுட்பங்களும்

03. தமிழகக் கோயிற் கட்டடக் கலை வரலாற்றில் விஜயநகர நாயக்கர் காலம் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய காலமாகும் என்பதை தகுந்த ஆதாரங்களுடன் பரிசீலனை செய்க.

    (i) கோபுரங்கள்
    (ii) மண்டபங்கள்

04. "இந்துமத மக்கள் நாகரிக வாழ்க்கை வாழ்ந்துள்ளனர் என்பதை மொகஞ்சதாரோ, ஹரப்பா அழிபாடுகள் உலகிற்கு எடுத்துக் காட்டியது மட்டுமல்ல இந்துமதமானது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நிலை கொண்டிருந்தது என்பதை புலப்படுத்தி நிற்கின்றது." இக்கூற்று பொருந்துமோ என்பதை மேல்வரும் தலைப்பின்கீழ் ஆராய்க.

    (i) கட்டடக்கலை
    (ii) இலட்சினைகள்

## பகுதி – II

05. "பண்டைத் தமிழகத்தின் இந்துக் கோயிற் கட்டடக்கலை மரபி ஆரம்பத்தினை பழந்தமிழ் இலக்கியங்களில் கண்டு தெளியலாம் ஆராய்க.

06. "இறையியலும் உலகியலும் இணைவு பெறும் கோலத்தின கஜுராஹோ கட்டடக்கலை மரபில் கண்டுகொள்ளலாம்." இக்கூற்றின தெளிவுபடுத்துக.

*****